1972 ஆகஸ்ட் 9]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, அரசாங்கத்தைப் பொறுத்த வரையில் ஒவ்வொரு கிடங்கிலும் அரிசியைக் கொண்டு வந்து கொடுக்கும்பொழுது அந்தக் கிடங்கு அதிகாரி அதனுடைய சாம்பிளைப் பார்த்து பரிசீலனை செய்து எடுத்துக்கொள்ள வேண்டும் என்ற முறையை வைத்திருக்கிறோம். அரிசியைக் கொண்டு வந்து கொடுக்கும்பொழுது ஈரப்பசையோடு கொண்டு வந்து கொடுக்கிறார்கள். அங்கு இருக்கும் அதிகாரிகள் அதைச் சரிவர பார்ப்பதில்லை. யார் கொண்டுவந்த அரிசி கெட்டுப்போயிருக்கிறது, யார் அதைச் சரியாகப் பார்த்து வாங்கவில்லை என்றெல்லாம் கணக்கு எடுத்துப் பார்ப்பது என்பது இவ்வளவு பெரிய நிறுவனத்தில் சாத்தியமான காரியமல்ல. இருந்தாலும் யார் மீது தவறு என்று கண்டுபிடிக்கப்பட்டால், அவர் மீது அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்கிறது. தமிழ் நாட்டில் கெட்டுப் போன அரிசி இப்பொழுது இருப்பில் சுமார் 5,000 டன் இருக்கும். அது கெட்டுப் போனது கூட அல்ல. ஈரப்பசையினுல் வண்ணம் மாறி சிவப்பாக இருக்கிறது. வியாபாரிகள் ஈரப்பசையோடு கிடங்குகளில் கொண்டு வந்து போடுவதால், அதை அப்படியே மூட்டையாக அடுக்கி வைக்கும்போது, குபு குபு என்று ஆவி ஏற்பட்டு, மண்கட்டி மாதிரி ஒன்றோடு ஒன்று பிடித்துக்கொண்டு வண்ணம் சிவப்பாக மாறிவிடுகிறது. அதை மறுபடியும் ஹல்லரில் கொடுத்து பாலிஷ் செய்து விற்பதற்கு ஏற்பாடு செய்யப்படுகிறது. கெட்டுப்போன அரிசி விநியோகிக்கப்படுகிறது என்று அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்தால், அந்த அரிசியை மாற்றி வேறு நல்ல அரிசி விநியோகம் செய்வதற்கு ஏற்பாடு செய்கிறோம்.

முன்னுள் கைதிகள் உதவிச் சங்கம்.

***10 வினு—திரு. என். கிட்டப்பா** : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நமது மாநிலத்தில் சிறையிலிருந்து விடுதலையாகும் கைதிகளுக்கு உதவிபுரியும் அமைப்பு ஏதேனும் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதில் யார் யார் அங்கம் வகிக்கின்றூர்கள் ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) உண்டு. மாநில, மாவட்ட அளவில் முன்னுள் கைதிகள் உதவிச் சங்கங்கள் இருக்கின்றன.

(இ) (1) சென்னை மாநில முன்னுள் கைதிகள் உதவிச் சங்கம், சென்னை.

தலைவர் :

தலைமைச் செயலாளர், மாநில அரசு.

அங்கத்தினர்கள் :

(1) மாநில காவல்துறைத் தலைவர்

(2) மாநில சிறைத்துறைத் தலைவர்

(3) காவல் ஆணையாளர், சென்னை

(4) குற்றவியல் மாநகரத் தலைமை நீதிபதி

(5) தலைமை நன்னடத்தை அலுவலர்

(6) கண்காணிப்பாளர், மத்திய சிறை, சென்னை

(7) மாநில அரசு நியமன உறுப்பினர்கள் (ஐவர்).

(8) மாவட்ட சங்கப் பிரதிநிதிகள்

(9) முன்னணி சமூக ஊழியர்கள், பெரு வணிகர்கள், பிரமுகர்கள் ஆகியோர்.

(2) மாவட்ட முன்னாள் கைதிகள் உதவிச் சங்கம்.

தலைவர் : மாவட்ட ஆட்சித் தலைவர்.

அங்கத்தினர்கள் :

(1) மாவட்ட குற்றவியல் அமர்வுமன்ற நீதிபதி

(2) மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர்

(3) கண்காணிப்பாளர், உள்ளூர் மத்திய சிறை

(4) வருவாய்த்துறை கோட்ட ஆட்சியாளர்

(5) வட்டார நன்னடத்தை அலுவலர்

(6) நன்னடத்தை அதிகாரி

(7) முன்னணி சமூக ஊழியர்கள், பெரு வணிகர்கள், பிரமுகர்கள் ஆகியோர்.

திரு. என். கிட்டப்பா : இப்பொழுது சிறையிலிருந்து வெளியே வரும் கைதிகளை தொழில் துறையில் ஈடுபடுத்த அரசு ஆவன செய்ய முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இரண்டு சங்கங்களும் என்னென்ன உதவிகளைச் செய்ய முடியுமோ அவைகளையெல்லாம் செய்து கொண்டு வருகின்றன. சுமார் 8 வகையான உதவிகளைச் செய்துவருகிறார்கள். அவற்றிலே ஒன்று அங்கத்தினர் குறிப்பிட்டது போல வேலை வாய்ப்பைத் தேடித் தருவது.